திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, தண்டராம்பட்டு, தொகுதியின் மைய இடமாக இருப்பதால், அங்கு மருத்துவ வசதிக்கு என்று ஒரு மருத்துவமனை இல்லாத காரணத்தால், அங்கே மருத்துவ மனை கட்டுவதற்காக 10,000 ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அரசாங்க மருத்துவமனை ஆரம்பிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவரவர்களே, மருத்துவமனை அமைப்பதுபற்றி இயக்குநர் இரண்டு பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார். முதலாவதாக, தண்டராம்பட்டில் ஒரு மருத்துவமனை தொடங்கலாம் என்பது. அது மட்டுமல்லாமல், ஏற்கனவே தண்டராம்பட்டில் அதாவது தண்டராம்பட்டுக்கு அருகில் 3 மைல் தூரத்தில் மொத்தக்கல் என்ற இடத்தில் ஒரு ரூரல் டிஸ்பென்சரி இருக்கிறது; அதையும் இந்த மருத்துவ மனையையும், இரண்டையும் ஒன்றாக ஒரே இடத்தில் ஆரம்பித்து செயல்பட்டால் நன்றாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்தச் சிக்கல் ஏற்பட்டது. ஒரே இடத்தில் இரண்டும் செயல்படும் அடிப்படையில் பார்த்தால் இன்னும் தொகை தேவைப்படுகிறது. அதுவும் பெறப்பட்டு, இரண்டு மருத்துவ மனைகளையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

இடைப்பாடி தொகுதியில் மினி ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 499—திரு. இ. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதி இடைப்பாடி பஞ்சாயத்து ஒன்றியத்திலுள்ள ஆடையூர் மற்றும் பக்கநாடு பகுதியில் ''மினி ஆரம்ப சுகாதார நிலையம்'' ஆரம்பிக்கத் திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கான பங்குத்தொகை செலுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆமெனில் இதுநாள்வரை அதன் பொருட்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தமாக ஆரம்பச் சுகாதார நிலைய இயக்குநர் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தக்க நடவடிக்கை எடுப்பதற்காகத் தொடர்பு கொண்டுள்ளார்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 மார்ச் 26]

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலே செயல்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல மருத்துவ வசதி கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு 'டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவரவர்களே, இது "மினி ஹெல்த் சென்டர்" அமைக்க எழுப்பப்பட்ட கேள்வியாகும். இதற்காக 6,000 ரூபாயை அங்கே இருக்கிற பஞ்சாயத்து யூனியனிலிருந்து கட்டியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு இருக்கிற விதிகளின்படி இந்தப் பணத்தை ஒரு "வாலண்டரி ஆர்கனைசேஷன்" கட்ட வேண்டும். ஆகவே, முதலில் அங்கே ஒரு வாலன்டரி ஆர்கனைசேஷனை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் மூலம் 6,000 ரூபாய் கட்ட வேண்டும். அதன் பிறகு மாநில அரசு 6,000 ரூபாய் போட்டு, மத்திய அரசிடமிருந்தும் 6,000 ரூபாய் பெற்று, மொத்தம் 18,000 ரூபாய் செலவில் இதை ஆரம்பிக்கலாம். மாவட்ட கலெக்டரிடம் இதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. வாலண்டரி ஆர்கனைசேஷன் அமைக்கப்பட்டு, அதன் மூலம் 6,000 ரூபாய் கட்டியவுடன் இந்த மினி ஹெல்த் சென்டரை ஆரம்பிப்பதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள மினி ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது 172 மினி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. இந்த ஆண்டிலே ஏறத்தாழ 50 மினி ஹெல்த் சென்டர்கள் அதிகமான துவக்க இருக்கிறோம். ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருப்பது 172 மினி ஹெல்த் சென்டர்கள்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு வேம்பார், ராமச்சந்திரபுரம் ஆகிய இடங்களில் மினி ஹெல்த் சென்டர் ஆரம்பிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில் வேம்பாரிலே மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. ராமச்சந்திரபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு அப்படியே இருக்கின்றது. தொடர்ந்து அது இயங்குவில்லை. ஆகவே அதற்குப் போதுமான நிதி இல்லாத காரணத்தால் தான் இயங்காமல் இருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சேலம் மாவட்டம் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்கிறார்கள்.